www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

| | | | | |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் I<br>Home Science I | Two Hours<br>Gr- 13 (2021) | 28 | T | I |

### பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளடித்தாளில் அடையாளம் (X) இடுக**

01) வர்ணத் தொகுதியில் மஞ்சள் செம்மஞ்சள், செம்மஞ்சள், என்பன முறையே எவ்வர்ணத் தொகுதிகளாகும்.
1. புடை வர்ணம், இடைப்பட்ட வர்ணம்
2. துணை வர்ணம், இடைப்பட்ட வர்ணம்
3. புடை வர்ணம், முதல் வர்ணம்
4. இடைப்பட்ட வர்ணம், துணை வர்ணம்
5. துணை வர்ணம், புடை வர்ணம்

02) உட்புறவெளி வடிவமைப்பினை நிர்மாணிக்கும்போது துணைக்கூறுகள் பற்றிய சரியான கூற்று
1. கிழக்கு மேற்கு திசைகளில் அமைக்கப்படும் சுவர்களுக்கு செங்கற் சுவர்கள் பொருத்தமானதாகும்
2. இயற்கை ஒளியை இயன்றவரை குறைந்த அளவில் பயன்படுத்த வேண்டும்
3. இரவு வேளைகளில் உள்ளக வெளியின் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும்
4. கூரை, பாவுகை ஆகியவற்றிற்கு அசுப்பெசுத்தோசு பயன்படுத்துதல் சிறந்ததாகும்.
5. குளியலறைத் தரைக்கு வழுவழுப்பான தன்மையுடைய தரைக்கல் சிறந்ததாகும்.

03) பின்வரும் நிலத்தோற்ற வடிவமைப்பினுள் மென்நிலத்தோற்ற வடிவமைப்பாக நீர் கருதுவது
1. பாடசாலை
2. கடற்கரை
3. மிருகக்காட்சிச்சாலை
4. வைத்தியசாலை
5. பணிமனை

04) பின்வரும் கூற்றுக்களினுள் விகிதசமம் எனும் கூற்றுக்குப் பொருத்தமான எண்ணக்கருவாகக் கருதப்படுவது.
1. ஒரு துணைக்கூறினை ஏனைய துணைக்கூறுகளின் உதவியுடன் முனைப்பாகக் காட்டுதல்
2. வெவ்வேறு துணைக்கூறுகளில் யாதாயினுமொரு இணக்கத்தைச் சேர்த்தல்
3. ஒரு ஆக்கத்தின்போது நீளம், அகலம் மற்றும் பார்வைச்சுமை அளவு ஆகிய காரணிகள் ஒன்றுடனொன்று பொருந்தியமைதல்
4. நிறம், இழையமைப்பு, அளவு போன்ற இயல்புகள் ஒன்றுடனொன்று முரண்படாதவாறு ஒழுங்கமைத்தல்
5. பார்வைச்சுமை சீராக அமையுமாறு அமைதல்

05) டை சக்கரைட்டுக்கள் இரண்டு ஆவன
1. குளுக்கோசு, புரற்றோசு
2. மோல்ரோசு, சுக்குரோசு
3. இலற்றோசு, புரற்றோசு
4. சுக்குரோசு, கலற்றோசு
5. குளுக்கோசு, மோல்ரோசு

06) அத்தியாவசியமான இரண்டு அமினோ அமிலங்கள்
1. அலனின், புரோலீன்
2. தைரோசீன், திரித்தோபேன்
3. குளூட்டமின், ஆர்ஜினைன்
4. லியூசின் அசுப்பாற்றிக்கமிலம்
5. வலீன், ஐசோலியூசின்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

07) புடைவைக் கைத்தொழிலிற்குப் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு சேதன மூலக்கூறாகக் கருதப்படுவது
1. செலிலோசு 2. கிளைக்கோஜன் 3. அமைலோசு
4. அமைலோ பெத்தின் 5. பொலிசக்கரைட்

08) பின்வரும் உணவுக் கூட்டத்தினுள் முழுப்புரத உணவானது
1. இறைச்சி, மீன், இலை வகை 2. முட்டை, கருவாடு, பயறு
3. கடலை, பருப்பு, பயறு 4. முட்டை, பால், இறைச்சி
5. பால், யோக்கற், கௌபீ

09) இலிப்பிட்டுக்களின் ஆக்க அலகு
1. கொழுப்பமிலம் 2. பெத்தோன் 3. அமினோ அமிலம்
4. குளுக்கோசு 5. அமைலோ பெத்தின்

10) பின்வருவனவற்றுள் இலிப்பிட்டுக்கள் தொடர்பான தவறான கூற்று
1. நீரில் கரையும் பதார்த்தமாகும்
2. காபன், ஐதரசன், ஒட்சிசன் ஆகிய பிரதான மூலகங்கள் அடங்கியிருக்கும்.
3. ஐதரசன், ஒட்சின் விகிதம் 2:1 இலும் கூடுதலாகும்
4. அறைவெப்பநிலையில் திரவநிலையில் காணப்படுபவை எண்ணெய் எனப்படும்
5. அறைவெப்பநிலையில் திண்மநிலையில் காணப்படுபவை கொழுப்பு எனப்படும்.

11) பின்வரும் கொழுப்பமிலங்களினுள் ஏமேகா 3 கொழுப்பமிலம் காணப்படுவது
1. லினோலெயிக்கமிலம் 2. ஒலேயிக்கமிலம் 3. பாமிற்றிக்கமிலம்
2. மிஸ்டிக்கமிலம் 5. அல்பா லினோலெனிக் அமிலம்

12) விற்றமின்களின் B கூட்டத்திற்குரிய நயசினும், அடினோசினும் இனங் காணப்படுவது முறையே,
1. விற் $B_4$, விற் $B_5$ 2. விற் $B_3$, விற் $B_8$ 3. விற் $B_{12}$, விற் $B_4$
4. விற் $B_{11}$, விற் $B_1$ 5. விற் $B_2$, விற் $B_3$

13) பின்வரும் கூற்றுக்களினுள் நார்ப்பொருளின் ஒரு தொழிலாக இல்லாதது எது?
1. உடலினுள் முற்றுமுழுதாக சமிபாடு அடைவதில்லை
2. மலத்தின் நிறையை அதிகரிக்கும்
3. குறுஞ்சங்கிலி கொழுப்பமிலங்களைத் தோற்றுவிக்கும்
4. குருதியில் வெல்ல மட்டத்தை உயர்த்தும்
5. முடியுரு இருதய நோய் ஏற்படுவதைக் குறைக்கும் ஆற்றல் உண்டு.

14) உணவுப் பொருட்களில் சிலவற்றின் போசணைப் பெறுமானத்துடன் தொடர்புபட்ட சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A – அதிக உயிரியற் பெறுமானம் கொண்ட புரதம் காணப்படும்
B – கல்சியம், பொஸ்பரஸ் காணப்படும்
C – விற் C தவிர்ந்த ஏனைய விற்றமின் கனியுப்புக்கள் அடங்கியுள்ளது
D – அனைத்து அமினோ அமிலங்களும் காணப்படுகின்றது
E – A,C,E போன்ற ஒட்சியெதிரிகள் காணப்படும்
இவற்றுள் முட்டையின் போசாணைப் பெறுமானம் பற்றிய கூற்றுக்கள்
1. A,B,C 2. B,C,D 3. A,C,D 4. A,D,E 5. B,E,C

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

15) பொறிமுறைச் சமிபாடு ஆரம்பிக்கும் சமிபாட்டுத் தொகுதியின் பகுதி யாது?
1. இரைப்பை  2. வாய்க்குழி  3. முன்சிறுகுடல்  4. களம்  5. சிறுகுடல்

16) முன்சிறுகுடலில் புரதத்தை அமினோ அமிலமாக மாற்றும் நொதியம் யாது?
1. திருச்சின்  2. பெப்சின்  3. இரெனின்  4. பெப்சினோசன்  5. அமிலேசு

17) பின்வரும் கூற்றுக்கள் சமிபாடு பற்றியனவாகும்
A – பித்தச் சாற்றில் அடங்கியுள்ள உப்புக்கள் காரணமாக குழம்பாக்கப்படும்
B – இச்சமிபாடு முன்சிறுகுடலில் ஆரம்பிக்கும்
C – சதையியினால் சுரக்கப்படும் இலைப்பேசு நொதியத்தினால் சிறுகுடலில் சமிபாட்டைந்து அகத்துறிஞ்சப்படும்

மேற்படி சமிபாடு எப்போசணைக்குரியதாகும்.
1. புரதம்  2. காபோவைதரேற்  3. இலிப்பிட்டு  4. விற்றமின்  5. கனியுப்பு

18) A – மதுபானம் அருந்துதலால் அகத்துறிஞ்சல் குறைவடையும்
B – கபேன் அடங்கியுள்ள பான வகைகள் அருந்துவதால் அகத்துறிஞ்சல் குறைவடையும்
C – கரையும் நார்ப்பொருட்கள் அகத்துறிஞ்சலை அதிகரிக்கும்

மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் குறிக்கும் கனியுப்புக்கள் எவை?
1. Zn, fe  2. k, zn  3. P, Mg  4. S, Ca  5. Mg, Ca

19) பின்வரும் உடற்திணிவுச் சுட்டிப் பெறுமானங்களில் உயரத்திற்குப் பொருத்தமான நிறை குறிப்பது,
1. BMI 18.5 – 24.9  2. BMI 25.0 - 30  3. 30 இற்கு மேல்
4. 18.5 இலும் குறைவு  5. 18.5 – 25.0 வரை

20) வாழ்க்கைச் சக்கரத்தில் போசணைத் தேவை உயர்வாக இருக்கும் இரு பருவங்கள்
1. குழந்தைப் பருவமும், வயது வந்த பருவமும் ஆகும்
2. குழந்தைப் பருவமும், பாலூட்டும் தாய்மார் பருவமும் ஆகும்
3. பிள்ளைப் பருவமும், கட்டிளமைப் பருவமும் ஆகும்
4. பிள்ளைப் பருவமும், கர்ப்பிணித் தாய் பருவமும் ஆகும்
5. வயது வந்த பருவமும், முதுமைப் பருவமும் ஆகும்

21) A – சிறுநீரகங்களின் தொழிற்பாடு குறைதல்
B – நீர்ப்பீடனத் தொகுதியின் தொழிற்பாடு குறைவடையும்
C – தசைக் தேய்வுறுதல்
D – உடலில் வெப்பநிலைச் சீராக்கம் குறைதல்

மேற்குறிப்பிட்ட அறிகுறிகளுக்குக் காரணமான நோய் நிலைமையானது
1. நீண்ட கால குறையூட்டம்  2. மிகையூட்டல்
2. உக்கிரமான குறையூட்டம்  4. பக்கவாதம்  5. நீரிழிவு

22) பின்வரும் கூற்றுக்களுள் இரும்புச் சத்துக் குறைபாடு காரணமாக ஏற்படும் குருதிச்சோகை பற்றிய கூற்றுக்களுள் தவறானது.
1. இரும்புச் சத்து அடங்கிய உணவு உட்கொள்வது குறைதல்
2. போதுமான அளவுக்கு இரும்புச் சத்து உடலினால் அகத்துறிஞ்சப்படல்
3. நீண்ட காலக் குருதிப்போக்கு
4. வேளை உணவிற்குப் பின் விற் C அடங்கியுள்ள புதிய பழவகைகளை உண்ணுதல்.
5. ஒட்டுண்ணித் தொற்று.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

23) A – பல்முளைத்தல் தாமதமாதல்

B – விரைவில் களைப்படைதல்

C – கால்கள் வக்கரித்தல்

D – என்புகள் எளிதில் முறிவடைதல்

E – நுண்மதி வளர்ச்சியில் தடங்கல் ஏற்படல்

மேற்குறிப்பிடப்பட்ட கூற்றுக்களினுள் கல்சியக் குறைபாட்டால் ஏற்படக்கூடிய அறிகுறிகளாவன.

1. A,B,C  2. A,C,D  3. B,C,D  4. C,D,E  5. A,C,E

24) உணவு வேளைக்காக உணவு தயாரிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய மூலாதாரமாகக் கொள்வது

1. போசணை அட்டவணைகள்
2. விதந்துரைக்கப்பட்ட உணவு அட்டவணைகள்
3. உணவுப் பிரமிட்டு
4. உணவுத் தட்டு
5. மேற்கூறிய யாவும்

25) பாடசாலை மாணவர்களிடையே இரைப்பை அழற்சி பரவலாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணமாகக் கருதக்கூடிய மிகச் சரியான கூற்று

1. அதிக உறைப்புள்ள உணவுகளை உட்கொள்ளல்
2. அதிக புளிப்புள்ள உணவுகளை உட்கொள்ளல்
3. காலை உணவை உட்கொள்ளாமை
4. இரவு உணவு உட்கொள்ளாமை
5. உணவுக் கோலங்களை மாற்றுதல்

26) உணவைச் சமைக்கும்போது பயன்படுத்தப்படும் ஒரு தடிப்பாக்கும் கருவியும் ஒரு மென்மையாக்கும் கருவியும் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

1. சீனியும் கறுவாவும்
2. தேங்காய்ப்பாலும், தக்காளியும்
3. அரிசிமாவும், இஞ்சியும்
4. வினாகிரியும், பழப்புளியும்
5. வெள்ளைப்பூடும், கொறுக்காய்ப் புளியும்

27) மாலதி எனும் மாணவி தொற்றா நோய்களின் தன்மைகள் பற்றி குறிப்பிட்ட கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – இதயத்தில் நோவு

B – வயிற்றுக் குமட்டல்

C – கண்களில் விழித்திரைக்குச் சேதம் ஏற்படல்

D – கால்களின் புலங் கூர்மை குறைவடைதல்

E – சிறுநீரகங்கள் செயலிழத்தல்

இவற்றில் நீரிழிவு நோய் காரணமாக ஏற்படும் சிக்கல் நிலைமைகள்

1. A,B  2. B,C  3. B,D  4. D,E  5. A,E

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

28) A – புரியாணி, வட்டிலப்பம், குலாப்ஜாமூன்
B – கேக், வைன், பற்றீஸ்
C – கேசரி, முறுக்கு, லட்டு
D – பாற்சோறு, ஆஸ்மி, கொண்டைப் பலகாரம்
E – கேக், தொதல், வடை

மேற்குறித்த உணவுக் கூட்டங்களினுள் முஸ்லீம்களின் பண்டிகைக்கு தயாரிக்கப்படும் விசேட உணவானது.

1. A  2. B  3. C  4. D  5. E

29) பின்வரும் கூற்றுக்களினுள் ஆடையில் தீப்பற்றும்போது செய்யும் முதலுதவி அல்லாதது
1. கீழே உருளும் படி கூறுதல்
2. உடலில் ஒட்டியுள்ள துணியை அகற்றாதிருத்தல்
3. சுத்தமான நீரினால் கழுவுதல்
4. தடித்த ஈரமான துணியால் போர்த்துதல்
5. வைத்திய உதவியை நாடுதல்

30) A – பாஸ்லி, புதினா, மிளகு
B – பேக்கிங் பவுடர், மதுவம், தேங்காய் நீர்
C – எலுமிச்சம் பழச்சாறு, வினாகிரி, சோடியம் நைத்திரேற்று
D – லெசிதீன், முட்டை மஞ்சள் கரு, கிளைகோல்
E – பசளிசாறு, பீட்ரூட் சாறு, கரட் சாறு

மேற்குறித்த சேர்மானப் பொருட்களில் குழம்பாக்கிகள் அடங்கிய கூட்டம் எது?

1. A  2. B  3. C  4. D  5. E

31) கீழைத்தேய முறையில் உணவு பரிமாறும்போது ஒருவருக்கு ஒதுக்கும் இட அளவானது
1. 18” x 20”  2. 18” x 22”  3. 20” x 24”
4. 18” x 23”  5. 20” x 22”

32) இலங்கையில் பெருமளவு பயன்படுத்தப்படும் பரிமாறல் முறையாக அமைவது
1. அமெரிக்கா முறை, புவே முறை
2. ரஷ்ய முறை, புவே முறை
3. ஜேர்மன் முறை, அமெரிக்க முறை
4. பிரான்சிய முறை, ஆங்கில முறை
5. ரஷ்ய முறை, பிரான்சிய முறை

33) நொதியம் சார்ந்த கபில நிறமாதல் செயன்முறைக்கு உட்படும் உணவு வகைகளுள் ஒன்று,
1. பருப்பு  2. உருளைக்கிழங்கு  3. கீரை  4. பால்  5. இறைச்சி

34) உணவு நற்காப்பு முறைகளுள் ஒன்றான ‘வெப்பப் பரிகளிப்பு’ என்பதனுள் அடங்கும் முறைகள்
A – வெப்பமேற்றல்
B – பாய்ச்சர் முறை
C – நீரின் அளவைக் கட்டுப்படுத்தல்
D – கதிர் இயக்கத்திற்கு உட்படுத்தல்
E – திரிவுபடுத்தல்

1. Aயும் Eயும்  2. Aயும் Bயும்  3. Cயும் Dயும்
4. Bயும் Eயும்  5. Dயும் Eயும்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

35) பழச்சாறு, ஜாம், பால் என்பவற்றின் பொதியிடலுக்குப் பொருத்தமானது
1. அரிமர வகை 2. உலோகத் திரவியம் 3. கண்ணாடி
4. பிளாஸ்டிக் 5. பொலித்தீன்

36) உணவுப் பொதியிடலுக்கு பொருத்தமற்ற பொலித்தீன் தடிப்பு
1. 20 மைக்ரோனிலும் குறைவு 2. 30 மைக்ரோனிலும் குறைவு
3. 10 மைக்ரோனிலும் குறைவு 4. 05 மைக்ரோனிலும் குறைவு
5. 18 மைக்ரோனிலும் குறைவு

37) பின்வருவனவற்றுள் இல்லத் துணையணிகள் உள்ளடங்கிய தொகுதி எது?
1. துவட்டு, கைக்குட்டை, இரவு உடை
2. மேசை விரிப்பு, கட்டில் விரிப்பு, கைத்துடைப்பம்
3. கைத்துடைப்பம், தலையணை, ஏப்ரன்
4. இரவு உடை, கையுறை, தலையணையுறை
5. தலையணையுறை, ஏப்ரன், போர்வை

38) இல்லத்தளபாட வணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொருத்தமான துணி வகைகளாகக் கருதப்படுவது
1. லினன் 2. பொலியஸ்ரர் 3. பருத்தி 4. கம்பளி 5. நைலோன்

39) பின்வரும் கூற்றுக்கள் துணிகளின் தீப்பற்றும் தன்மை தொடர்பானது
A – இலகுவில் தீப்பற்றல், சாம்பல் மீதியாதல்
B – மந்த கதியில் எரிந்து கரிபோன்ற சாம்பல் எஞ்சியிருக்கும்
C – உருகி எரிதல்
D – சாம்பல் திரளைபோன்று காட்சியளித்தல்
E – இலகுவில் எளிவதில்லை உருகும் மற்றும் சுருங்கும் தன்மையுடையது.
பட்டுத்துணியின் தீப்பற்றும் தன்மையாகக் கருதப்படுவது.
1. A 2. B 3. C 4. D 5. E

40) பத்திக் முறையில் சாயமூட்டுவதற்கு சரியான துணி வகையாகக் கருதப்படுவது,
1. பருத்தி, லினன் 2. பட்டு, நைலோன் 3. பொலியஸ்ரர், பருத்தி
4. லினன், கம்பளி 5. கம்பளி, பொலியஸ்ரர்

41) எழுத்து மூலமான தொடர்பாடலின் அனுகூலமாக அமைவது,
1. விரைவாகத் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்
2. தெளிவற்ற சந்தர்ப்பங்களில் வினவி தெளிவுபடுத்தலாம்
3. நிரூபிக்கக்கூடிய ஆற்றல் குறைவு
4. மீட்டிப் பார்த்தல் கடினம்
5. மீள்பாவனைக்கெனக் கோவைப்படுத்தமுடியும்

42) பின்வரும் எத்தலைப்புக்களில் உரையாடலைக் கட்டியெழுப்புவது சிறந்ததாகும்
1. அரசியல் 2. ஆபாச விகடம் 3. விளையாட்டு
2. சுகாதாரம் 5. தனிப்பட்ட வாழ்க்கை

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

43) A – நீர்க்குழாய் வாயில்களில் கசிவுகள் உள்ளதா என சோதித்தல்
B – கழுவு குழாய்களுக்குப் பதிலாக வாளியில் நீரை நிரப்பி வாகனங்களைக் கழுவுதல்
C – குளியல் நேரத்தையும் கட்டுப்படுத்தல்
D – நீர் விரயத்தை தவிர்க்கத்தக்க துணைச் சாதனங்களை நீர்க்குழாய்த் தொகுதியில் பொருத்துதல்
E – சலவை இயந்திரங்களில் உச்ச கொள்ளளவு வரை புடைவைகளை இட்டுக் கழுவுதல்
மேற்குறிப்பிட்ட கூற்றுக்களினுள் மூன்றாம் நிலைத் தேவையாகக் கருதப்படுவது
1. A  2. B  3. C  4. D  5. E

44) வீட்டு நீர்த்தொகுதியில் துணைச் சாதனங்களுக்கு நீர் வழங்கும் குழாயின் அளவு யாது?
1. 25 mm  2. 35 mm  3. 15 mm  4. 18 mm  5. 28 mm

45) பின்வருவனவற்றுள் மின்னோட்டத்தை அளக்கும் அலகு எது?
1. ஓம் (Ω)  2. வாற்று (W)  3. அம்பியர் (A)
3. வோல்ற்று (V)  5. மீடிறன் (f)

46) A – மின்குமிழ் வகைகளிலுள்ள புளோரொளிர்வு மின்குமிழைப் பயன்படுத்துவது இலாபகரமானது
B – நீரை வெப்பமாக்குவதற்கு அமிழ்ப்பு வெப்பமாக்கியே சிறந்ததாகும்
C – சோறு சமைப்பதற்கு சோறு சமைப்பானைப் பயன்படுத்துவது வினைத்திறனானது
D – கூரை மின் விசிறிகளைவிட மேசை மின் விசிறிகளே இலாபகரமானது
E – கதோட்டுக் கதிர்குழாய் தொலைக்காட்சிக்குப் பதிலாக LCD வகை உபகரணங்களைப் பயன்படுத்துவது அனுகூலமானதாகும்.

மேற்குறிப்பிட்ட மின் உபகரணங்களினுள் மின்னைச் சிக்கனப்படுத்த உதவும் உபகரணமாக அமையாதது.
1. A  2. B  3. C  4. D  5. E

47) A – மின் சக்தி உற்பத்தி
B – உடைகளை உலரச் செய்தல்
C – விளைச்சல்களைத் தூற்றல்
D – குளிர்மையைப் பேணல்
மேற்குறித்த செயற்பாடுகளில் எவ் இயற்கை வளத்தின் மூலமாக செயற்படுத்தப்படுகின்றது.
1. நீர்  2. சூரிய சக்தி  3. அரியமரம  4. நிலம்  5. காற்று

48) மீனில் காணப்படும் பல்நிரம்பாக் கொழுப்பமிலம் பின்வரும் எந்நோயைக் குறைக்கும் ஆற்றலுடையது
1. நீரிழிவு  2. காய்ச்சல்  3. புற்றுநோய்  4. பக்கவாதம்  5. கொரோனா

49) பின்வரும் தாவரங்களுள் மனித உணவாகப் பயன்படுத்தப்படுபவை எவை?
1. மஞ்சள், திப்பிலி  2. வல்லாரை, பொன்னாங்காணி
2. சிறு புல்லடி, திப்பிலி  4. வேம்பு, வேங்கை
3. ஆடாதோடை, வேம்பு

50) உணவுப் பெயர்ச் சுட்டியொன்றில் அடங்க வேண்டிய விடயம் அல்லாதது
1. பொதுப்பெயர்  2. வணிகப் பெயர்  3. உரிமையாளர் பெயர்
4. கோட்டுக் குறியீட்டு எண்  5. பொதியின் பெயரும் தன்மையும்

(1x50=50 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| மனைப்பொருளியல் II<br>Home Science II | Three Hours<br>Gr- 13 (2021) | 28 | T | II |

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடைதருக.**

1. i) வன் நிலத்தோற்ற வடிவமைப்பு என்றால் என்ன? உதாரணம் தருக?
   ii) கழிவுநீர் உருவாகும் பிரதான முறைகளைக் குறிப்பிடுக?
   iii) பெருங்குடலில் வாழும் பற்றீரியாக்களினால் உற்பத்தியாக்கப்படும் விற்றமின்கள் எவை?
   iv) இரும்புக் குறைபாட்டின் நோயறிகுறிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
   v) முடிச்சிட்டுச் சாயமிடல் என்பது யாது?
   vi) வெளிற்றல் என்பது யாது? இச்செயன்முறைக்குப் பயன்படுத்தப்படும் ஒட்சியேற்றிகள் 2 குறிப்பிடுக.
   vii) செல்லூக்கமுள்ள ஓய்வுநேரச் செயற்பாடுகளில் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக.
   viii) மின்வலு என்றால் என்ன? அதன் அலகு யாது?
   ix) உணவு நற்காப்பிற்காகப் பயன்படுத்தப்படும் பௌதீக முறைகள் 2 குறிப்பிடுக.
   x) நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் 4 குறிப்பிடுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

2. i) பௌதிக வாழ்க்கைச் சூழலின் மூன்று பகுதிகளையும் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.
   ii) கட்டிட அமைப்பில் உள்ளக வெளியை வடிவமைப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.
   iii) மின்னுடன் தொடர்புடைய அலகுகள் 3 குறிப்பிட்டு இரண்டினை விளக்குக.
   iv) மழை நீர் சேகரிப்பின் பயன்கள் 5 குறிப்பிடுக.

3. i) நாளாந்த உணவு வேளைகளில் உணவுப் பொருட்கள் சார்பளவில் உள்ளடக்கப்பட வேண்டிய அளவுகள் தொடர்பான வழிகாட்டிகள் 3 குறிப்பிடுக.
   ii) ‘உணவுத்தட்டு’ எனும் எண்ணக் கருவின் போசணைப் பெறுமானத்தை விளக்குக.
   iii) கட்டிளம் பருவப்பிள்ளைக்குப் பொருத்தமான காலை உணவைத் திட்டமிட்டு அவ்வுணவில் அடங்கியுள்ள போசணைப் பொருட்களின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
   iv) இதய நோயாளி ஒருவருக்கு உணவு வேளைகளைத் திட்டமிடும்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 5 குறிப்பிடுக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

4. i) உணவு பழுதடைவதில் தாக்கம் செலுத்தும் பௌதீகக் காரணிகள் 3 குறிப்பிடுக.
   ii) மெலார்ட் தாக்கத்தின்போது உணவில் ஏற்படும் மாற்றத்தை விளக்குக.
   iii) உணவு நற்காப்பிற்காகப் பயன்படுத்தப்படும் இரசாயன முறையாகிய புகையூட்டலை விளக்கி அதன் அனுகூலம், பிரதிகூலம் 2 வீதம் குறிப்பிடுக.
   iv) இயற்கைப் பொதியிடு பொருள் 4 குறிப்பிட்டு, அவற்றில் இரண்டினை விளக்குக.

5. i) ஆடைக் கைத்தொழிலின் முக்கியத்துவம் 4 குறிப்பிடுக.
   ii) மேசைக்காப்புத் துண்டினை நிருமாணிக்கும் படிமுறையைத் தருக?
   iii) தையல்களை வகைப்படுத்தி ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக?
   iv) விசேட சந்தர்ப்பங்களில் செய்யப்படும் நேர்த்தியாக்கங்கள் 3 குறிப்பிடுக.

6. i) பசுமை நுகர்வோர் எனப்படுவோர் யாவர்?
   ii) சேதனப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம் 3 குறிப்பிடுக.
   iii) சுற்றுப் பயணத்தால் ஏற்படும் சாதகமான தாக்கங்கள் ஐந்து குறிப்பிடுக.
   iv) குழுநிலைச் சுற்றுப் பயணத்திற்கும், மாற்றுச் சுற்றுப் பயணத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் 5 தருக?

7. i) கைகளைக் கட்டாயம் கழுவ வேண்டிய சந்தர்ப்பங்கள் 3 குறிப்பிடுக.
   ii) உணவு நஞ்சடையும் அடிப்படை முறைகளை உதாரணத்துடன் குறிப்பிடுக.
   iii) சமையலறையில் கவனம் செலுத்த வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள் 5 குறிப்பிடுக.
   iv) கேக் தயாரிப்பிற்குரிய மூலப் பொருட்களைக் குறிப்பிட்டு கேக் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 குறிப்பிடுக.

8. பின்வரும் தலைப்புக்களில் நான்கினைத் தெரிவு செய்து விளக்குக?
   1) வடிவமைப்பின் அடிப்படை அம்சங்களில் கோடுகள்
   2) பழங்களை உணவாக உட்கொள்வதன் முக்கியத்துவம்
   3) துணி மேற்பரப்பில் அலங்காரவுருக்கள் இடுவதன் அவசியம்
   4) தொலைபேசிப் பயன்பாட்டின்போது செய்ய வேண்டியவை
   5) உணவு நற்காப்பின் முக்கியத்துவம் (4 x 4 = 16 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk